# ஜா - எல நகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 14 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய ஜா - எல நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி ஜா – எல நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளின் பிரகாரம் மாகாண அரசசேவை ஓய்வூதிய நிலுவைப் பங்களிப்புப் பணம் ரூபா 1,926,536 தொகையாகவும், மாகாண அரச சேவை ஓய்வூதிய பங்களிப்பு பட்டியல்களின் பிரகாரம் ரூபா 1.254,027 ஆகவும் இருந்தது. ஆண்டிற்குரிய ரூபா 235,787 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்த

போதிலும் அம்மீதி ரூபா 238,415 ஆக இருக்க வேண்டியிருந்தமை கணக்காய்வின் பொது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஊழியர் பிணை வைப்பு முதலீடு வருடத்திற்குரிய வட்டியுடன் மீதி ரூபா 72,803 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 65,103 தொகை என கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்நதது.

(இ) 2010 இன் இறுதிக் காலாண்டிற்குரிய செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரியாக ரூபா 163,018 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான மீதியொன்று காணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே முன்னைய வருடங்களுக்குரிய ரூபா 9,579 அன மிகை ஏற்பாடுகளுடன் ரூபா 172,597 தொகையான மீதி செலுத்த வேண்டியதாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 287,189 தொகை பெறவேண்டிய தொகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பெறுமதி சேர்வரி செலுத்துவதிலுள்ள தாமதத்தினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 179,135 தொகையான தண்டப்பணம் செலவினமாகக் கணக்குகளில் வைக்கப்படுவதற்கு பதிலாக பெறுமதிசேர் வரிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,948,114 ஆக இருந்ததுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,240,259 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2003 முதல் 2005 வரையான காலப்பகுதியில் 14 கணக்காய்வு ஐயவினாக்களையும் உள்ளடக்கி 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 15 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை காரணமாக கூட்டுத்தொகை ரூபா 147,727,107 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 வங்கிக் கணக்குகள்

(i) ஐந்தொகையில் வங்கிக் கணக்கு மீதியாக வேறாகக் காட்டப்படாது ரூபா 6,813,995 தொகையாக ஒன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பொழிப்புக் காசேட்டு மீதியின் சரியான தன்மை தொடர்பாக திருப்திப்பட முடியாதிருந்தது.

(ii) மக்கள் வங்கிக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் பொழிப்பு காசேட்டின் பிரகாரம் வரவு மீதி ரூபா 2,693,792 தொகையாகவும், பொழிப்புக் சாசேட்டில் அம்மீதி ரூபா 2,545,116 தொகையாகவும் இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் கையிலுள்ள காசு ரூபா 80,003 தொகை காசின் கீழ் வேறாகக் காட்டப்படாது வங்கிக் கணக்கிணக்கத்தின் ஊடாக சீராக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழ் காட்டப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிப்புச் செய்யப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 255) | |
| 159(1)(ஊ) ஆம் பிரிவு | சமய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டடிருந்த ரூபா 100,000 தொகையான முற்கொடுப்பனவுகள் |

தொடர்பாக அமைச்சரின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 371 | 04 வருடங்களுக்கு மேலான காலத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 156,096 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருகக்வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | மக்கள் வங்கிக்குரிய 06 மாதங்களை விஞ்சி கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 118,294 தொகையான 14 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,888,861 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு மேலான மீண்டெழும் செலவினம் ரூபா 10,888,861 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 |
| (i) | இறையும் வரியும் | 11,457 | 7,508 | 13,184 | 13,450 | 12,840 | (610) |
| (ii) | வாடகை | 4,605 | 5,046 | 2,729 | 6,428 | 5,495 | (933) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 229 | 215 | 105 | 1,344 | 234 | (1,110) |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 4,359 | 2,883 | 1,625 | 15,111 | 21,401 | 6,290 |

### 2.2.2 வீதவரி

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 170(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை ஆதனவரியை அறவீடு செய்வதற்காக பிடியாணைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டவை | 2010 உள்ள படியானவை | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டவை | 2009 உள்ள படியானவை | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணிக்கான வேதனம் | 30,978 | 24,500 | 6,478 | 29,429 | 24,151 | 5,278 |
| ஏனையவைகள் | 30,885 | 54,105 | (23,200) | 28,017 | 49,438 | (21,421) |
| உப மொத்தம் | 61,863 | 78,605 | (16,742) | 57,446 | 73,589 | (16,143) |
| மூலதனச் செலவு | 16,899 | 37,164 | (20,265) | 9,218 | 191 | 9,027 |
| முழு மொத்தம் | 78<762 | 115,769 | (37,007) | 66,664 | 73,780 | (7,116) |

## 2.4 மிகைக்கட்டண அறவீடு

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 182(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் உரிய பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்களுக்கு அமைய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடவேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 55,804 ஆகும்.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் தரம் | 02 | 01 |
| இரண்டாம் தரம் | 26 | 19 |

| | | |
|---|---|---|
| ஆரம்ப தரம் | 90 | 64 |
| ஏனையவர்கள் (சமயா சமயம்/ தற்காலிகம் நாட்சம்பளம் ஒப்பந்த) | - | 19 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### பெற வேண்டிய கணக்குகள்

02 வருட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற 26 ஊழியர்களினதும் ரூபா 210,537 தொகையான கடன்நிலுவை மற்றும் 05 வருடங்களுக்கும் அதிகமான காலத்திலிருந்து கொண்டுவபைப்படுகின்ற ரூபா 1,110,620 தொகையான மின்சாரக்கட்டண நிலுவையினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்களில் இழப்புக்களும்

(அ) நீர்ப்பட்டியல் கட்டணம்

2010 ஆம் ஆண்டின் நீர்ப்பட்டியல்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தியதன் அடிப்படையில் முறையே ரூபா 8,093 மற்றும் ரூபா 1,275 தொகை தண்டம் மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெளியீட்டு வரி

2010 இன் மூன்றாம் காலாண்டிற்கான வெளியீட்டு வரி கணிப்பீடு செய்தபோது செப்தெம்பர் மாதத்திற்கான வெளியீட்டு வரி ரூபா 73,105 ஆக இருக்கவேண்டிய போதிலும் அது ரூபா 609,212 எனக் கணிப்பீடு செய்யப்படாமையினால் மூன்றாம் காலாண்டிற்குரிய பெறுமதிசேர் வரியாக மேலதிகமாக ரூபா 536,107 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிறிஸ்துராஜ மாவத்தை பக்கச் சுவர் கட்டுதல்

2008 திசெம்பர் 26, 2009 பெப்ரவரி 28 மற்றும் 2009 மே 13 ஆந் திகதிகளின் இறுதி அளவிடை அறிக்கைகளின் பிரகாரம் சுகவரின் நீள அடி 522 ஆக இருந்தும். 2009 திசெம்பர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட இடப்பரிசோதனையின் பிரகாரம் கட்டப்பட்டிருந்த சுவரின் நீள அடி 361 ஆக இருந்தமையால் 161 அடிக்காக ரூபா 323,336 மேலதிகக் கொடுப்பனவும் 130 அடிநீள அளவில் உட்பக்கம் பூரப்படாமையினால் ரூபா 11,245 தொகையான மேலதிகக் கொடுப்பனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சாந்த ஜோசப் வீதியில் மதகு நிர்மாணித்தாலும் காணிகள் ஒரு பகுதி கட்டுதலும்

2009 திசெம்பர் 31 ஆந் திகதி சபையின் வேலை அத்தியட்சகருடன் மேற்கொள்ளப்பட்ட இடப்பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விடய இல. 03 இன் பிரகாரம் காணிகள் உட்பகுதி 03 அங்குல தடிப்பத்தில் கொங்ரீட் இடப்பட்டிருந்ததுடன் திரும்பவும் விடய இல. 04 இன் கீழும் 06 அங்குல தடிப்பத்தில் கொங்ரீட் இடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் காணிகள் உட்பகுதி 09 அங்குல தடிப்பத்தில் கொங்ரீட் இடப்படுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காணின் உள்ளக நீளத்திற்கும் அகலத்திற்கும் 3/8 அங்குல வலுவை அதிகாரிப்பதற்கான தேவைகளும் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2009 திசெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒரவர் மீள சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். உத்தியோகத்தரின் கொடுப்பனவைத்

தீர்மானிக்கும் போது, 2007 மே 11 ஆந் திகதி பொதுநிருவாகச் சுற்றறிக்கை இல. 9/2007 இலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு உரித்தான சம்பளம் ரூபா 13,790 தொகை செலுத்துவதற்கு மேலதிகமாக அச்சுற்றுநிருபம் மற்றும் மேல்மாகாண சபையின் பிரதம செயலாளரின் 2008 ஏப்ரல் 07 ஆந் திகதி இல. 1/16/1/9/(XI வெலும) என்ற கடிதத்தையும் அடிப்படையாகக் கொண்டு விநியோகிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 மே 06 ஆந் திகதிய 02/23/04/01(11 வெலும்) இலக்க கடிதத்தின் அறிவுறுரைகளுக்கு முரணாக 2010 பெப்ரவரி 26 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தின் 3(iii) ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் கீழ் உத்தியோகத்தருக்கு மேலதிகமாக ரூபா 5,000 தொகை மாதாந்தம் கொடுப்பனவொன்று செலுத்தவதற்கு திர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2010 மே மாதம் தொடக்கம் 2010 நவம்பர் மாதம் வரை ரூபா 35,000 சபை நிதியத்திலிருந்து மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முரணாகச் செத்தப்பட்டிருந்தது.

(ii) 2006 இன் கொடுப்பனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பந்தியிலுள்ள ‘‘ஔ’’ உபபந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் அங்கத்தவர் எண்ணிக்கை 03 இற்கும் 05 இடையிலான எண்ணிக்கையாக இருக்க வேண்டிய போதிலும் சபை 07 அங்கத்தவர்களை நியமித்து மீளாய்வாண்டின் போது ரூபா 13,500 தொகையினை மேலதிக கொடுப்பனவாகச் செலுத்தியிருந்தது.

## 2.10 செயற்பாட்டு செயற்திறன்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர விநியோகம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்துதவ் தொடர்பாக 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 02 இல் குறிப்பிடப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திர விநியோகித்தல் நடைமுறைகளின் 09(1) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் நிலையப் பரிசொதனை நடவடிக்கைகளுக்காக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு

அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக பெறப்படுகின்ற வருமானங்கள் கணக்குகளில் தனியான வருமானத் தலைப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி விளக்குகளுக்கான மானியம் பெறுதல்

2009 யூன் 13 ஆந் திகதி நுகர்வோர் பட்டியல்களுக்காக ரூபா 77,347 தொகை கழிக்கப்பட்டு ரூபா 307,417 தொகை இலங்கை மின்சார (தனியார்) கம்பனியினால் வீதிவிளக்குகள் பராமரிக்கும் மானியமாக அனுப்பட்டிருந்ததுடன் அக்கழிப்பனவுகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. கழிக்கப்பட்டிரந்த தொகைக்குரிய 19 மின்சார மாணிகள் பரீட்சிக்கப்பட்டிராததுடன் அம்மானியின் இலக்கம், சமர்ப்பிக்கப்பட்ட வீதி விளக்கு பதிவேட்டு இலக்கம், இலங்கை மின்சார (தனியார்) கம்பனியினால் அனுப்பப்பட்டுள்ள வீதி விளக்கு பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட இலக்கங்கள் என்பன இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக வீதி விளக்குகள் பராமரிப்பு மானியம் கிடைத்திருக்கவில்லை.

(இ) ஊழியர்களின் ஆட்சேர்ப்பு

26 செயற்திட்ட ஊழியர்களும் கூட்டுப்பசளை செயற்திட்டற்காக 05 ஊழியர்களும் உள்ளடங்கலாக 31 பேர்கள் சேர்ப்பதற்குரிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) அங்கீகாரமும் இரண்டு செயற்திட்டங்களுக்குரிய செயற்திட்ட அறிக்கையும் மற்றும் முன்னேற்ற அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்க வில்லை.

## 3. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்